அலகு

11



# வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள்

## கற்றலின் நோக்கங்கள்

TAU699

இந்த பாடத்தின் இறுதியில் மாணவர்கள் அறிவது

- ❖ வழிகாட்டுதல் வரையறுத்தல்
- ❖ வழிகாட்டுதலின் நோக்கங்களை விளக்குதல்
- ❖ வழிகாட்டுதலின் நோக்கங்களை விவரித்தல்
- ❖ வழிகாட்டுதலின் வகைகள் விளக்கவும்
- ❖ வழிகாட்டுதலின் முக்கியத்துவத்தையும், வாய்ப்புகளையும் விளக்குதல்.
- ❖ வழிகாட்டுதலின் செயல்பாடுகளை பட்டியலிடுதல்.
- ❖ வழிகாட்டுதலின் கொள்கைகள் பற்றி விவாதித்தல்.
- ❖ வழிகாட்டுதலின் அறிவுரை வழங்குபவரின் பங்கை பட்டியலிடுதல்.
- ❖ வழிகாட்டுதலுக்கும் ஆலோசனைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை எழுதுதல்.
- ❖ ஆலோசனையை வரையறுத்தல்.
- ❖ ஆலோசனையின் குறிக்கோளை விவரித்தல்.
- ❖ ஆலோசனையின் தேவையை விளக்குதல்.
- ❖ ஆலோசனையின் வாய்ப்புகளை விளக்குதல்.
- ❖ ஆலோசனைக்கான கொள்கைகளை பட்டியலிடுதல்.
- ❖ பல்வேறு வகையான ஆலோசனைகள் பற்றி விவரித்தல்.
- ❖ ஆலோசனையின் படிகளை விளக்குதல்.
- ❖ ஆலோசனையின் திறமைகளை பட்டியலிடுதல்.
- ❖ ஒரு ஆலோசகரின் பங்கை விளக்குதல்.
- ❖ ஒரு ஆலோசகரின் பண்புகளை பட்டியலிடுதல்.
- ❖ வழிகாட்டுதலில் ஏற்படும் பிரச்சனைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குதல்.

**திருக்குறள்:**

*அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து*
*இன்சொலன் ஆகப் பெறின்.*

**விளக்கம்:**

*முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையை விட நல்ல தாகும்*



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 297 1/5/2020 10:47:16 AM

## முன்னுரை

இன்றைய அவசர உலகில், அனைவருக்கும் அடுத்தவரின் உதவி தேவைப்படுகிறது சிறியவர்கள் முதல் பெரியவர் வரை, ஒவ்வொரு கால கட்டத்திலும் உதவியை நாடுதல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். உதாரணமாக, ஒரு குழந்தை தன் பள்ளிபடிப்பை முடித்து, அடுத்து என்ன படிப்பைப் படிக்கலாம் என்று தேர்ந்தெடுக்கும் போதும், அவர்களின் வாழ்க்கைப் பாதையை தேர்ந்தெடுக்கும் போதும் மற்றும் பொருத்தமான வாழ்க்கைத்துணை பிறகு குழந்தைகள் வளரும் போது, அவர்களுக்கு நல்ல வாழ்க்கை துணை, வாழ்க்கையின் கஷ்டங்களை சமாளித்தல் என இது வாழ்க்கையின் கடைசிவரை செல்கிறது. நம்முடைய சமுதாய வாழ்க்கையில் மற்றவர்களின் உதவி தேவைப்படுகிறது.

> **வழிகாட்டுதல்**
> "வாழ்கையோடு இசைந்திரு".
> – யாரோ

## 11.1 வழிகாட்டுதல்


வழிகாட்டுதலின் 'பொருள் வழிநடத்துதல்', 'குறிப்பிட்ட வழி', மற்றும் 'பாதையை காட்டுதல்'.

வழிகாட்டுதல் என்பது தனி ஒருவனுக்கு மற்றொரு திறமைசாலி மூலம் சில உதவிகளை செய்வதாகும்.



வழிகாட்டல் என்பது ஒருவர் எங்கு செல்ல விரும்புகிறார் என்பதை தீர்மானிக்க, ஒருவருக்கு உதவ, அவருக்கு என்ன செய்ய வேண்டும் (அ) அவர் தனது சிறந்த நோக்கத்தை எப்படி நிறைவேற முடியும் என்பதை தீர்மானிக்க உதவுகிறது. அது அவருடைய வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினையை தீர்க்க உதவுகிறது. அது தனிப்பட்டவரின் பிரச்சினையை தீர்க்காது. ஆனால் அவற்றை தீர்ப்பதற்க்கான திறனை அளிக்கிறது.

வழிகாட்டுதல் தனிநபரை நோக்குகிறது. பிரச்சினையை அல்ல, அதன் நோக்கம் தனிநபரின் வளர்ச்சி சுயதிசையில் செல்ல ஊக்குவிக்கிறது. வழிகாட்டல் தனிநபருக்கோ (அ) குழுக்களுக்கோ கொடுக்கப்படலாம், ஆனால் ஒரு தனிநபர் குழுவில் இருந்தாலும் பிரத்தியோக முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

| எடுத்துக்காட்டு | வழிகாட்டுதல் |
|---|---|
| எ.கா ரமேஷ் 92% மதிப்பெண்களுடன் 12 ம் வகுப்பை முடித்துள்ளான். அவன் சரியான வழியில் செல்ல உதவி தேவைப்படுகிறது. அவனுக்கு எந்தமாதிரியான மேற்படிப்பு படித்தால் ஒளிமையமான எதிர்காலம் அமையும் என எடுத்துரைக்க உதவி தேவைப்படுகிறது. |  |





XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 298 1/5/2020 10:47:17 AM

### வழிகாட்டல் – வரையறு

வழிகாட்டல் என்பது தனிநபர் ஒன்றை தேர்ந்தெடுக்கவும் தயார்படுத்தவும், ஒரு நிலையில் அமரவும் மற்றும் முன்னேறவும் அல்லது ஒரு நல்ல நிலையை தேர்ந்தெடுக்கவும் உதவுதல் ஆகும். (பிராங்க் பார்சன் 1951)

வழிகாட்டல் என்பது அதிகபட்சம் ஒருவரின் சொந்த தீர்மானங்களை வளர்க்கவும், அவரது திறமை மற்றும் சக்தியை தெரிந்து கொள்ளவும் அக்கறை கொள்கிறது.

வழிகாட்டல் என்பது சிறியவர்களுக்கு அவர்கள் தங்களுக்குள்ளும் மற்றவர்களுடனும், சூழ்நிலைகளுடனும் ஒத்துப் போகவும் அளிக்கப்படும் பயிற்சியாகும். (ஸ்கின்னர்)

### வழிகாட்டல் தொடர்பான மற்ற சொற்றொடர்கள்

- ❖ வழிகாட்டல் ஒரு தனிப்பட்ட உதவி ஆகும்.
- ❖ வழிகாட்டல் என்பது ஒரு செயல்முறையாகும். இதன் மூலம் தனது சொந்த முயற்சிகளால் தனது பிரச்சினைகளை தீர்க்கிறார்.
- ❖ வழிகாட்டல் என்பது ஒருவரது தனிப்பட்ட நலனில் கவனம் கொள்கிறது.

### வழிக்காட்டலின் நோக்கங்கள்

1. வாழ்க்கையில் பல்வேறு தருணங்களில் தேர்ந்தெடுக்கப்படும் சரியான செயல்முறைகளால் அனுசரித்துச் செல்வதற்கான நம்பிக்கையை கொண்டு வரும்.
2. சீரான வளர்ச்சிக்கு உதவுகிறது.
3. ஒருவருடைய தேவைக்கும், திறமைக்கும் ஏற்ப சரியான செயல்முறையை தீர்மானிக்க உதவுகிறது.
4. ஒருவருடைய எதிர்கால விருப்பம், திறமை, மற்றும் சமூக தேவைக்களுக்கு வழிவகுக்கிறது.

### வழிகாட்டலின் குறிக்கோள்கள்:

- ❖ சுய ஆராய்ச்சிக்கு உதவுகிறது.
- ❖ மதிப்புகளை தீர்மானிக்க உதவுகிறது.
- ❖ தனிப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை உருவாக்கப் பயன்படுகிறது.
- ❖ உலகத்தைப் பற்றி ஆராய உதவுகிறது.
- ❖ திறமையை வளர்க்க உதவுகிறது.
- ❖ நல்லுறவை மேம்படுத்துகிறது.
- ❖ வருங்கால பொறுப்புகளை ஒத்துக் கொள்ள பயன்படுகிறது.

### வழிகாட்டலின் வகைகள்:

| வகைகள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|
| **1. தனிப்பட்ட வகை**<br>❖ தனிநபர்களின் தனிப்பட்ட மற்றும் சமூக குணநலன்களை வளர்ப்பதன் மூலம் தனிநபர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், சிறந்த மாற்றங்களை தேடுவதற்கும் உதவும்.<br>❖ நாம் என்ன பழக்கவழக்கங்கள், அணுகுமுறை மற்றும் மதிப்புகளை பின்பற்ற வேண்டும் என்பதை தீர்மானிக்கிறது.<br>❖ இது முழுநபருடன் சம்மந்தப்பட்டு உள்ளது.<br>❖ இந்த வழிகாட்டல் அனைத்து (அ) குழந்தையின் பலம் மற்றும் பலவீனத்தை சுட்டிகாட்டும். | Mr.லூகாஸ்க்கு 3 பருவமடைந்த ஆண் பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் சாம், ஷியாம் மற்றும் சால். அவர்கள் மூவரும் அணுகுமுறை உருவாகும் நிலையில் உள்ளனர் மற்றும் ஆபத்தான பழக்க வழக்கங்களுக்கு போவதற்குண்டான நிலையில் உள்ளனர்.<br><br>Mr.Lucas நெருக்கமாக அவர்களை கண்காணித்து விருப்பமான அணுகுமுறை மற்றும் தேவையில்லாத தீய பழக்க வழக்கங்களில் இருந்து சில சமயங்களில் அவர் 3 குழந்தைகள் வளர்ப்பதற்கு வழி காட்டுதலைத் தேடுகிறார். |



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 299 1/5/2020 10:47:17 AM

| | |
|---|---|
| **2. தொழில் சம்பந்தமான வழிகாட்டல்**<br>❖ ஒரு வேலை / தொழில் தேர்ந்தெடுப்பது மற்றும் சரிசெய்தல் தொடர்பானது.<br>❖ ஒரு தனிநபர் வேலையை தேர்வு செய்து, அதற்காக தயார் படுத்திக்கொண்டு, வேலை செய்து அதில் முன்னேற்றம் அடைய உதவுகிறது. | சங்கீதா 22 வயது பெண் B.sc (நர்சிங்) படிப்பை முடித்துள்ளார். அவளுக்கு 3 சமமான நல்ல புகழ் பெற்ற மருத்துவ மனைகளிலும் வேலை கிடைக்கிறது. அவளுக்கு 3 விருப்பமான மருத்துவமனையை தேர்வு செய்ய உதவி தேவை. அவளுடைய எதிர் காலத்திற்கு எது சிறந்தது என்பதை தேர்ந்தெடுக்க உதவி தேவைப்படுகிறது.<br><br> |
| **3. கல்வி சம்பந்தமான**<br>❖ ஒரு தனிப்பட்ட மாணவர் அவருடைய அதிகபட்ச கல்வி வளர்ச்சியை அடைய உதவுகிறது. எல்லா வயதும் உடைய மாணவ சமுதாயத்திற்கு என பிரத்யேகமாக அளிக்கப்படும் ஆலோசனை முறையாகும்.<br>❖ மாணவர்களுக்கு சரியானதை தேர்ந்தெடுக்க, மட்டுமல்லாமல் பள்ளி, பாடத்திட்டம், படிப்பு மற்றும் பள்ளி வாழ்க்கைக்கேற்ப தங்களை மாற்றிக் கொள்ளவும் மற்றும் எல்லா வகையான வளர்ச்சிக்கும் உதவுகிறது. |  |

## வழிகாட்டலின் வாய்ப்புகளை விவரிக்கவும்

வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய, தனது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, தனி நபருக்கு உதவுவதற்கான அளவு, நீளம், அகலம், வரம்பு, முழுமை மற்றும் பல்வேறுவற்றிற்கும் பொருந்துகிறது.

## பள்ளிகளில் வழிகாட்டல் முறைகளின் வாய்ப்புகள்

- வீட்டு சூழ்நிலையில் இருந்து பள்ளி சூழலுக்கு திருப்திகரமான மாற்றம் செய்ய உதவுகிறது.
- அடிப்படை திறமைகளைக் கற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்களை கண்டறிய உதவுகிறது.
- பள்ளியை விட்டு நிற்கும் நிலையைத் தவிர்க்க உதவுகிறது.



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 300 1/5/2020 10:47:20 AM

- வாழ்க்கையின் குறிக்கோள் மற்றும் அர்த்தத்தை புரிந்து கொள்ள உதவுகிறது.
- மேற்படிப்பிற்கு திட்டமிட உதவுகிறது.

## 11.1.1 வழிகாட்டலின் செயல்பாடுகளை பட்டியலிடுக

- ஊக்குவித்தல் மற்றும் ஆதரவு
- தெரியப்படுத்துதல்
- அறிவுரை வழங்குதல்
- மதிப்பிடுதல்
- இணைப்பு மற்றும் வெளிப்படுத்துதல்
- கவனித்தல் மற்றும் ஊக்கப்படுத்துதல்
- கருத்து வழங்குதல்
- ஆலோசணை வழங்குதல்

## 11.1.2 வழிகாட்டலின் கொள்கைகள்

வழிகாட்டுதல் பின்வரும் கொள்கைகளை சார்ந்தது (கார்டன் மற்றும் பலர், 2008)

1. *தனிநபரின் முழுவளர்ச்சியை உள்ளடக்கியது.*

   ஆளுமையின் மொத்த வளர்ச்சி சூழலில் இது கொடுக்கப்பட வேண்டும்.

2. *தனிமனித வேறுபாடுகளை அங்கீகரிக்கிறது*

   ஒவ்வொரு தனிமனிதனும் குறிப்பிட்ட தேவை, விருப்பம் மற்றும் மதிப்பில் வேறுபடுகிறார்கள். மாணவர்கள் பல்வேறு கலாச்சார பின்னணியிலிருந்து வருவதால் ஆசிரியர்கள் இந்த வேறுபாடுகளை தெரிந்திருக்க வேண்டும்.

3. *கண்ணியம், மரியாதை மற்றும் சுதந்திரம் வழிகாட்டல் செயல்முறைக்கு ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும்.*

   தனிநபரை மரியாதை, கண்ணியம் மற்றும் சுதந்திரத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

4. *வழிகாட்டுதல் என்பது தொடர் நிகழ்வாகும்*

   தொடர்ச்சியான உரையாடல்கள் பயனுள்ளதாக இருக்கும்.

5. *வழிகாட்டல் நல்ல தகவல் தொடர்பு திறனுக்கு பயன்படுகிறது.*

   வழிக்காட்டுதலுக்கு தொடர்புசார் திறன் முக்கியமாக தேவைப்படுகிறது. இதில் வாய்மொழி மற்றும் வார்த்தையற்ற இரண்டு தொடர்புகளை உள்ளடக்கியது.

6. *வழிகாட்டுதல் ஒரு குழு செயல்பாடு*

   வழிகாட்டுதலுக்கு தனிப்பட்ட பயிற்சி நேரம், அதிக மக்களை உள்ளடக்கிய நிபுணத்துவம் மற்றும் பன்முக கண்ணோட்டம் மிகவும் பயனுள்ள முறையில் கொடுக்கிறது.

7. *அர்த்தமுள்ள உரையாடலுக்கு எல்லா தொடர்பும் விலைமதிப்பற்றதாகும்.*


   அனைவருக்கும் தனித்துவம் மற்றும் அவர்களுக்குரிய வித்தியாசமான கலந்துரையாடல்கள் உண்டு.

8. *கல்லூரி வாழ்க்கையில் மாணவர்களுக்கு உதவி செய்ய ஆலோசகரின் இடைப்படும் தன்மை மற்றும் தரம் உதவுகிறது.*

9. *மாணவர்கள் வெற்றிப்பாதை திட்டத்திற்காக காத்திருக்கிறார்கள்.*

10. *இதன் மைய செயல், மாணவர்களோடு சேர்ந்து அவர்களின் கல்வி வளர்ச்சி வெற்றிக்கு திட்டமிடுவதாகும்.*

## 11.1.3 வழிகாட்டலில் ஆலோசனையாளரின் பங்கு






XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 301 1/5/2020 10:47:20 AM

> உன்னால் தனியாக செயல்பட முடியும் காலம் வரை உன்னை நேராக வழி நடத்த உனக்கு வழிகாட்டல் வழி வேண்டும்.
>
> – டினா யூதர்ஸ்

## 11.2 ஆலோசனை


### அறிமுகம்:

சமுதாயத்தில் ஆலோசனை வழங்குவது என்பது சமூதாயம் போன்று பழைமையானது. நம் அன்றாட வாழ்க்கையில் பல நிலைகளில் ஆலோசனைகளைப் பெறுகிறோம். ஒரு குடும்பத்தில், பெற்றோர்கள் குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்குவது, ஒரு சமுதாயத்தில் மருத்துவர்கள் நோயாளிகளுக்கு ஆலோசனை வழங்குவது. வழக்கறிஞர்கள் வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனை வழங்குவது, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவது போன்றவை மற்றும் ஆகும்.

**மாணவர் செயல்பாடு**

> வழிகாட்டுதலின் வழிகளை பங்கு நாடகமாக ((Role play) பயிற்சி செய்

ஆலோசனை என்பது ஒரு தனிப்பட்ட ஒருவருக்கு தேவைப்படும் நேரத்தில் உதவி செய்வதாகும். கார்ல் ரோஜர்ஸ் கூற்றுப்படி, ஆலோசனை வழங்குவது என்பது ஒருவருடன் தொடர்ச்சியாக நேரடியாக தொடர்பு கொண்டு அவரின் மனோபாவங்கள் மற்றும் நடத்தையை மாற்றியமைப்பதில் உதவியாக இருப்பது. ஆலோசனை வழங்குவதில் ஈடுபடும் இருவரில் ஒருவர் உதவியை நாடுபவர் மற்றும் அடுத்தவர் கல்வியில் தேர்ச்சி பெற்றவர், பிரச்சினையை கண்டுபிடித்து தீர்வை நோக்கி செல்ல உதவி செய்கிறார்.



### ஆலோசனை வழங்குதல் – வரையறுத்தல்

ஆலோசனை வழங்குதல் என்பது இரண்டு நபர்களுக்கிடையே உள்ள ஒரு தனிப்பட்ட மற்றும் சக்திவாய்ந்த உறவு ஆகும். இதில் ஒருவர் மிகவும் அனுபவமிக்க வாய்ந்தவர் மற்றும் புத்திசாலியானவர் (ஆலோசகர்) மற்றும் மற்றொருவர் குறைந்த அனுபவமிக்க இளையவர் (ஆலோசனை கேட்பவர்) ஆலோசனை கேட்பவர், ஆலோசனை வழங்குபவரிடம் பிரச்சனைக்கு உதவியை தேடுவார். இவர்கள் இரண்டு பேரும் ஒன்று சேர்ந்து பிரச்சனையை தெளிவாக ஆராயும் போது ஆலோசனை கேட்பவர் தனக்கு முடிவை தானே தேர்ந்தெடுக்க முடியும்.

ஆலோசனை என்பது ஒத்துக்கொள்கின்ற, நம்புகின்ற மற்றும் ஒரு நல்ல உறவு முறை ஆகும், இதில் ஒருவர் அவருடைய வருத்தம் மற்றும் கவலைகளை வெளிப்படையாக கலந்து ஆலோசிக்க கற்றுக்கொள்கிறார். மேலும் துல்லியமான நடத்தை இலக்கை அடைய அத்தியாவசிய சமூக திறன்களை பெறுவதற்கும், தேவையான புதிய நடத்தையை செயல்படுத்த தைரியம் மற்றும் சுயநம்பிக்கையை வளர்க்கிறது. (மெர்லி.எம்.ஓல்சென்)

### ஆலோசனையின் குறிக்கோள்களை கணக்கிடுக.

1. நேர்மறையான மன ஆரோக்கியத்தினை பெறுதல்
2. பிரச்சினைக்கு தீர்வு காணுதல்
3. தனிப்பட்ட செயல்திறனை மேம்படுத்துதல்.



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 302 1/5/2020 10:47:20 AM

4. நடத்தை மாற்றம் அதிகரித்தல்.
5. முடிவெடுக்கும் திறனை வளர்த்தல்.
6. நடத்தையை ஒரு இலக்காக மாற்றியமைத்தல்.

## ஆலோசனையின் தேவையை விளக்குக.

ஒருவர் தன்னிறைவு அடைவதற்கு உதவ சுயசார்ப்புடைய மற்றும் சுய இயக்கம் அடைவதற்கும் பயனுள்ள முறையில் அவர்களுக்குள்ளாக அனுசரித்து சென்று நல்ல அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கும் தேவைப்படுகிறது.

## 11.2.1 ஆலோசனையின் கொள்கை பட்டியல்

கீழ்க்கண்டவை சித்திக் (2013) ஆலோசனை கொள்கை பட்டியல்

1. ஒவ்வொரு தனிமனிதனும் மதிக்கப்பட்டு நன்றாக பராமரிக்கப்படுகிறார் என்ற நல்லுணர்வை அவருடன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. ஒருவர் கவனம், மரியாதை கலாச்சார வேறுபாடுகள் மற்றும் மனித அனுபவ வேறுபாடுகள் போன்வற்றை அறிந்து நடக்க வேண்டும்.
3. அனைவரிடமும் தொழில் முறையான நட்புடன், நேர்மையாகவும், நம்பகமாகவும், வெளிப்படையாகவும், நட்புடனும், கோபம் இல்லாமலும் நடந்து கொள்ள வேண்டும்.
4. ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கைக்கு மதிப்பு கொடுக்க வேண்டும்.
5. பரிவுடன் (Empathy)) இருக்க வேண்டும். மற்றொருவரின் அனுபவத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.
6. தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்த வேண்டும்.
7. தனிநபரின் வாய்ப்புகளை தேர்வு செய்து அதிகப்படுத்த முயல வேண்டும்.
8. தனிநபரின் தனிப்பட்ட திறமைக்கேற்ப பயிற்சியளிப்பதை நோக்கமாக கொள்ள வேண்டும்.
9. உடன் பணிபுரிபவர்கள் மற்றும் பிற நிபுணர்களை பணிவுடன் நடத்த வேண்டும்.

தனி ஒருவரின் எதிர்கால முடிவுகள், மற்றும் இருக்கிற பிரச்சினைகளுக்கு கவனத்துடன் தீர்வு காண கவனம் வேண்டும்.

## ஆலோசனைக்கான வாய்ப்புகளின் விளக்கம்

ஆலோசனை என்பது சிக்கலான உலகத்தில் நிறைய வாய்ப்புகளை வழங்குகிறது. இந்த வாய்ப்புகள் நிறைய சேவைகளை உள்ளடக்கியது. (தொழில் நுட்பமான மற்றும் தொழில்துறை செயல்முறை கார்ப்பரேஷன் 2016)

| வ. எண் | சேவைகள் | விளக்கம் |
|---|---|---|
| 1 | மத ஆலோசனை (Religious Counselling) | தியான கூடுகைகள், விரிவுரைகள் மற்றும் மத புத்தகங்கள் படிப்பது போன்ற மதப்பணிகளால் மத ஆலோசனை வழங்கப்படுகிறது. |
| 2 | தடுப்பு ஆலோசனை (Preventive Counselling) | சமூக, உளவியல் மற்றும் சுகாதார பிரச்சினைகளை விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் தடுப்பதற்கு உதவுகிறது. |
| 3 | கல்வி ஆலோசனை (Educational Councelling) | மாணவர்களுக்கு படிப்பில் உதவி செய்வதற்கும், அவர்களுடைய அறிவு மற்றும் திறமையை வளர்ச்சியடைவதற்கும் இது உதவுகிறது. |



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 303 1/5/2020 10:47:20 AM

| | | |
|---|---|---|
| 4 | தொழில் மற்றும் கல்வி ஆலோசனை (Vocational and educational councelling) | பல்வேறு வகையான தொழில் மற்றும் பல்கலைக்கழகப் படிப்புகள், வேலை வாய்ப்புகள் நிபந்தனைகள் அடிப்படைய வேலைகள் ஆகியவை பற்றி மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. |
| 5 | சமூகம் மற்றும் நெறிமுறை ஆலோசனைகள் (Social and ethical counselling) | மாணவர்களுக்கு தகுந்த சூழ்நிலையை கண்டறிவதற்கும் திறனை பெறுவதற்கும், திறமைசாலிகள் மற்றவர்களுடன் கலந்துரையாடல் ஆகியவை நிர்வாகம், மதம் மற்றும் நெறிமுறைகளை பின்பற்றி வழங்கப்படுகிறது. |
| 6 | மாணவர் ஆலோணை (Student counselling) | மாணவர்களுக்கு தனிப்பட்ட மற்றும் நடத்தை பிரச்சனைகளை தீர்க்க உதவுகிறது. மேலும் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கை சார்ந்த ஆலோசனை வழங்கப்படுகிறது. |

## ஆலோசனையின் பல வகைகள்

**சித்திக் – ன் வகைப்பாடுகள்** (2013)

| வ.எண் | வகைகள் | பொருள் மற்றும் எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1 | தனிநபர் ஆலோசனை (Individual counselling) | இதன் அடிப்படை நோக்கம் தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை சமாளிக்கும் உத்திகளை வளர்ப்பதில் உதவுகிறது. இது நேர்முக அடிப்படையில் அமைகிறது. இது சமாளிக்கும் உத்திகளை வளர்க்கிறது. |
| 2 | குழு ஆலோசனை (Group Counselling) | இது தனிப்பட்ட இலக்குகளை ஆராயவும், முன்னேற்றம் செய்யவும், நேர்மையான பகிர்வு மற்றும் கேட்டலின், சூழ்நிலையில் நேர்மறையான மாற்றங்களை மேம்படுத்துவதற்காக குழுவிற்கு உறுப்பினர்களை வழங்குகிறது. |
| 3 | தொழில் ஆலோசனை (Career counselling) | தனிநபர் ஒருவரின் திறமை மற்றும் வேலை வாய்ப்பை ஆராய்ந்து கூறுதல். |
| 4 | திருமண ஆலோசனை (Marriage Counselling) | திருமணத்திற்கு ஒருவரை தயார் படுத்துவதால் அவர்கள் இருவருக்கும் அனுசரித்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல் மனப்பான்மை அதிகரிக்க உதவுகிறது. |
| 5 | மாணவர் / கல்வி ஆலோசனை (Student/ Academic counselling) | மாணவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் நடத்தை சம்மந்தமான பிரச்சனைகளை மட்டுமில்லாமல் அவர்களின் விருப்பப்பட்ட தொழிலை ஏற்படுத்த உதவுகிறது. |
| 6 | குடும்ப ஆலோசனை (Student counselling) | குடும்ப நெருக்கடி மற்றும் ஒத்துழைப்பு குறையும் நேரங்களில் உதவி செய்கிறது. |




XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 304 1/5/2020 10:47:20 AM

| | | |
|---|---|---|
| 7 | முதியவர் ஆலோசனை (Geriatric counselling) | முதியவர்களின் நடத்தையில் பிரச்சினைகள் வரும்போது உதவுகிறது. எ.கா மனச்சோர்வு |
| 8 | மரபியல் ஆலோசனை (Genetic counselling) | பெற்றோர்களுக்கு மரபியல் சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ வசதிகள் குறித்து ஆலோசனை வழங்குவது. |
| 9 | இ ை ண ய த ள ம் வழியாக ஆலோசனை (Online counselling) | மின்னஞ்சல் மற்றும் இணையதள அப்லிகேஷன் (Application) மூலம் ஆலோசனை வழங்குவது. |

## 11.2.2 ஆலோசனை வழங்குதலின் படிகளை விவரித்தல்

GE8BJD




## 11.2.3 ஆலோசகரின் திறன்களை பட்டியலிடுதல்

1. உரையாடலில் கலந்து கொள்ளுதல்
2. கூர்ந்து நோக்குதல்
3. உன்னிப்பாக செவிமடுத்தல்
4. சிந்தனையாளர் / பிரதிபலிக்கும்
5. தேவையான கேள்விகளை கேட்பது
6. சுருக்கமாக எடுத்துரைத்தல்
7. அமைதி
8. தன்னிச்சையாக ஆலோசனை கூறுவது
9. வலிமை
10. பச்சாதாபம் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல்
11. கலாச்சார உணர்திறன்

## 11.2.4 ஆலோசகரின் பங்கை பட்டியலிடுதல்.

1. வழிகாட்டுதல்
2. ஆலோசனை மற்றும் தடுத்தல்
3. ஆபத்தை மதிப்பிடுதல்




வழிகாட்டுதல் Vs ஆலோசனை வழங்குதல்



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 305 1/5/2020 10:47:21 AM

## 11.2.5 வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்

| | வழிகாட்டல் | ஆலோசனை |
|---|---|---|
| பொருள் | ஒரு பிரச்சினையை தீர்ப்பதற்கு (அ) அதிலிருந்து விடுபடுவதற்கு அனுபவம் வாய்ந்த ஒருவரால் அறிவுரை (அ) அதற்கு தொடர்பான தகவல்களை தருவதற்கு வழிகாட்டல் என்று பெயர். | ஒருவருக்கு அவருடைய தனிப்பட்ட (அ) உளவியல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு ஆலோசகரால் அறிவுரை வழங்குவது ஆலோசனை எனப்படும். |
| இயற்கை | பிரச்சினையை தடுப்பதற்கு உதவுகிறது. | பிரச்சினையை முற்றிலும் மற்றும் மாற்று வழி அறிவுரை வழங்கப்படுகிறது. |
| அணுகுமுறை | விரிவான மற்றும் விரிவாக்கப்பட்ட அணுகுமுறை | ஆழமான மற்றும் உள்முக சிந்தனை அணுகுமுறை |
| என்ன செய்கிறது? | மனிதனுக்கு நல்ல மாற்று வழிமுறைகளை தேர்வு செய்ய உதவுகிறது. | அ வ ர் க ளு டை ய கண்ணோட்டத்தில் பிரச்சினைக்கு வழிமுறைகளை தீர்வு செய்ய உதவுகிறது. |
| கையாளுதல் | கல்வி மற்றும் தொழில் தொடர்பான பிரச்சினைகள் | தனிப்பட்ட மற்றும் சமூக – உளவியல் சம்பந்தமான பிரச்சினைகள் |
| வழங்கப்படும் முறை | உயர்வான தனிப்பட்ட ஒருவர் (அ) நிபுணர் மூலம் | தொழில் வழியான பயிற்சி (அ) அதிகபட்ச பயிற்சி பெற்ற ஒருவர் மூலம். |
| மறைவிடம் | வெளிப்படையான மற்றும் ஓரளவு தனிப்பட்ட இடம் | முற்றிலும் தனிப்பட்ட |
| வழிகாட்டல் (அ) ஆலோசிக்கும் முறை | ஒருவருடன் ஒருவர் (அ) ஒருவருடன் பலர். | ஒருவருடன் ஒருவர் |
| முடிவு செய்தல் | வழிகாட்டுபவர் மூலம் | ஆலோசனை பெறுபவர் மூலம் |

## 11.3 ஆலோசகரின் பண்புகளை பட்டியலிடுக.

1. பரிவு
2. புரிந்து கொள்ளுதல்
3. மரியாதை கொடுத்தல்
4. உறுதியாக ஒத்துக்கொள்ளுதல்
5. மதிப்புகளுக்கு மரியாதை கொடுத்தல்
6. தனிப்பட்ட திறமை
7. தனிப்பட்ட அறிவு
8. தனிப்பட்ட வளர்ச்சி




XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 306 1/5/2020 10:47:22 AM

## 11.3.1 ஆலோசனை வழங்குதலில் உள்ள குறைக்களுக்கான எடுத்துக்காட்டுகள்

| வ. எண் | குறைகள் | விளக்கம் | பண்புகள் |
|---|---|---|---|
| 1 | காதல் வயப்படுதல் (Love affairs)  | இயற்கையாகவே எதிர்பாலினத்தின் மீது ஈர்ப்பு ஏற்படுதல். | படிப்பில் நாட்டம் குறைதல், வகுப்புகளை நிராகரித்தல். வீடு, தங்கும் விடுதியில் இருந்து ஓடி விடுதல். இதன் மூலம் பால்வினை நோய் தொற்றுக்கு ஆளாகிறார்கள். |
| 2 | மனஅழுத்தம் (Stress management)  | மன அழுத்தம் என்பது உங்கள் உடல் எந்த விதமான தேவை(அ)அபாயத்திற்கேற்ப மாறிக்கொள்வதாகும். | தேர்வு பயம், விருப்பப்பட்ட கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் போவது, வேலை பளு, உடன் நண்பர்கள் தொந்தரவு, அதிக பதட்டம் இவை அனைத்தும் தற்கொலை, பிறர் மனதை புண்படுத்துதல் மற்றும் உளவியல் தொடர்பான வியாதிகளை தரும். |
| 3 | மனச்சோர்வு மற்றும் சுயதீங்கு (Depression and Self – harm)  | பருவ நிலையில் உள்ளவர்கள் சுதந்திரம் மற்றும் சார்ந்திருத்தல் இரண்டையும் சமநிலைபடுத்துதலில் சிரமத்தை எதிர்கொள்வதால் மனச் சோர்விற்கு ஆளாகிறார்கள் | மனச்சோர்வு, தற்கொலை, உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம், மது, குடும்ப நபர்களை இழத்தல், தாய் (அ) தந்தை ஒருவர் மட்டும் நலிந்த பெற்றோர் மற்றும் குழந்தை உறவு. |
| 4 | கோபத்தை கட்டுப்படுத்துதல் (Anger management)  | கோபம் என்பது எதிர்மறை உணர்வு நேர்முறை வழிகளை கொண்டு உணர்வுகளை கட்டுப்படுத்தலாம். | குடும்ப நபர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மீது கோபம் கொள்ளுதல். |



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 307 1/5/2020 10:47:24 AM

| | | | |
|---|---|---|---|
| 5 | குழந்தைகள் துஷ்பிரயோகம் / துன்புறுத்தல் (Child abuse/harassment)  | பெற்றோர் மற்றும் பாதுகாவலரால் குழந்தைக்கு காயம், மரணம், உணர்ச்சி வசப்படுத்துதல் மற்றும் தீவிர தீங்கு விளைவிக்கும் ஆபத்திற்கு குழந்தைகள் துஷ்பிரயோகம் என்று பெயர். | தவறான நடத்தப்படுதல், அலட்சியப்படுதல், உடல் ரீதியாக துன்புறுத்துதல், பாலியல் வன்கொடுகை, தவறாக வழிநடத்துதல், உணர்வுப்பூர்வமாக துன்புறுத்துதல். |
| 6 | நினைவாற்றல் மற்றும் ஒருமுகப் படுத்துதல் (கவனம்) (Memory and concentration)  | நினைவாற்றல் குறைதல் மற்றும் குறைந்த கவனம் ஆகியவைகளால் கல்வியில் பிரச்சினைகள் ஏற்படுகிறது. | தொலைக்காட்சி பார்த்தல், கணிணியில் விளையாடுதல் மற்றும் ஆரோக்கியமற்ற நண்பர்கள். |
| 7 | பெற்றோர்களை அனுசரித்தல் (Adjustment with parents)  | பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளுக்குக் கேற்ப குழந்தைகளால் வாழ முடிவதில்லை மற்றும் அவர்களின் அறிவுரைகள் மற்றும் குறுக்கீடுகள் ஒத்துழைப்பு குறைபாடுகளை ஏற்படுத்துகிறது. | பொறுப்பற்ற தன்மை, கோபம், குறைந்த போட்டி, மனப்பான்மை, ஒத்துழையாமை |
| 8 | பள்ளி/ கல்லூரியில் அனுசரித்தல் (Adjustment in school/college)  | குழந்தைகளுக்கு தங்களுடைய நண்பர்கள், ஆசிரியர்கள், பாடங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளில் அனுசரித்து செல்வதில் கடினமாக இருக்கிறது. | தூண்டுதலின் பேரில் முடிவெடுத்தல், தோல்வி, ஏமாற்றம் மற்றும் அனுசரித்து செல்வதில் பிரச்சினை. |
| 9 | வாழ்க்கை வழிகாட்டல் (Career guidance)  | திறமை, விருப்பம், புத்திசாலித்தனம், வேலை வாய்ப்பு மற்றும் போட்டித்தேர்வு ஆகியவற்றில் மாணவர்களின் அறிவுத் திறத்தை அதிகரித்தல். | அவர்களுடைய பலம் மற்றும் பலவீனம் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல். |



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 308 1/5/2020 10:47:28 AM

| | | | |
|---|---|---|---|
| 10 | வீட்டுக் கொடுமைகள் குடும்ப வன்முறை (Domestic violence)  | குடும்பத்தில் ஒவருர் மூலம் மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படுவது | குடும்ப பிரச்சனைகள் மற்றும் குழந்தைகளின் நடத்தை பிரச்சனைகள். |
| 11 | சூதாட்டம் (Gambling)  | சூதாட்டம் என்பது நாம் வெற்றி பெறுவோமா? இல்லையா என்ற நிச்சயம் இல்லாத நிலையில் பணத்தையோ (அ) விலை மதிக்க முடியாத பொருட்களையோ பந்தயம் கட்டி பணம் (அ) உயர்ந்த பொருட்களை அடைய நினைப்பது ஆகும். | தனிமை, மன அழுத்தம், மனச்சோர்வு மற்றும் பல பிரச்சினைகள் ஏற்படும். |
| 12 | தவறானபொருள் பயன்பாடு (Subtance abuse)  | தவறான பொருள் பயன்பாடு என்பது போதை பழக்கம் எனவும் அறியப்படுகிறது போதை பழக்கம் என்பது ஒரு மருந்தை தவறான முறையில் அளவுக்கு அதிகமாக உடலுக்கு அபாயம் அளிக்கும் வகையில் உபயோகித்தல் ஆகும். | புதிய பழக்கத்தை உருவாக்குதல், தேர்வில் தோல்வி, விபத்து, வன்முறை திட்டமிடப்படாத பாதுகாப்பற்ற உடலுறவு. |
| 13 | மட்டம் போடுதல் (Truancy)  | மட்டம் போடுதல் என்பது வீடு, பள்ளி மற்றும் தங்கும் விடுதியிலிருந்து ஓடிவிடுதல். | ஆரோக்கியமற்ற நட்பு மற்றும் உறவுகள். |

*மத்திய உள்துறை அமைச்சகத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு சமீப அதிகார பூர்வ அறிக்கை – தற்கொலை விகிதத்தில் தமிழக மாணவர் சமூகம் முன்னணி வகிக்கிறது. (ஏப்ரல் 4, 2018, டெக்கன் கிரானிகல்)*




XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 309 1/5/2020 10:47:30 AM

## மாணவர் செயல்பாடு

- ஆலோசனை வழங்குவதை பங்கு நாடகமாக பயிற்சி செய்
- வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் மையங்களுக்கு சென்று பார்க்கவும்.

உங்களுக்குத் தெரியுமா?



கார்ல் ரோஜர்ஸ் (Carl Rogers) (1902 – 1987) என்ற அமெரிக்க உளவியலாளர், சிகிச்சையளிப்பவருக்கும், நோயாளிக்கும் இடையிலான தனிப்பட்ட உறவுமுறை பற்றி கூறியுள்ளார்

## பாடச்சுருக்கம்

வழிகாட்டுதல் என்பது உளவியல் துறையில் தொடர்பு கொண்டது. இது நடவடிக்கைகளை சரியான பாதையில் தேர்வு செய்வதற்கான அவசியத்தை வாடிக்கையாளர்களுக்கு அளிக்க உதவுகிறது. ஆலோசனை என்பது உளவியலுடன் தொடர்பு கொண்டுள்ளது. இது ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் மேர்பார்வையை உள்ளடக்கியது. ஒரு நிறுவனத்திற்கோ அல்லது தனிப்பட்ட ஒருவருக்கோ இவை இரண்டும் பயன்படுத்தப்படும் போது ஆலோசனை (Counselling) அதிக அளவிலும் வழிகாட்டுதல் பள்ளி மாணவர்களுக்கு குறிப்பிட்ட செயல்களுக்கும் உதவுகிறது. ஆலோசனை உளவியல் துறையின் மற்ற பரப்புகளையும், வழிகாட்டுதல் குறிப்பிடப்பட்டவைகளையும் உள்ளடக்கியது.

## A-Z சொற்பொருட்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| புத்துணர்ச்சி முகாம் (Retreats) | - | சாதாரண வாழ்க்கையிலிருந்து விலகி இறைவனுடன் செலவிடுவதற்கான சந்தர்ப்பம் |
| தொழிலர் தொகுதி மனப்பான்மை (Professional) | - | பணியிடத்தில் ஒரு மரியாதை மனசாட்சி, மற்றும் பொதுவணிக ரீதியான முறையில் வெளிப்படுதல். |
| தோற்றம் (Perspective) | - | உண்மையான நிலைகளில் விஷயங்களை காண்பிப்பதற்கான திறன் அல்லது உறவுமுறையின் முக்கியத்துவம். |
| உள் தோற்றம் Introverted) | - | ஒதுக்கப்பட்ட தன்மை அல்லது கூச்ச சுபாவம் உடையவர். |
| வெளித் தோற்றம் (Extroverted) | - | பொதுவாக சமுதாயத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தும் தன்மை உடையது. |
| சமூக மனநிலை (Socio-psychological) | - | சமுதாய மற்றும் உளவியல் காரணிகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்துவது. |
| நம்பிக்கைக் குரியது (Confidential) | - | இரகசியம் (அ) தனிமைப்படுத்தப்பட்டது. |
| ஒழுங்குநெறி (Ethical) | - | மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ளுதல் (அல்லது) மறுத்தல் |
| மனச்சோர்வு (Depression) | - | சோகமான உணர்வு |
| உள்ளுணர்வு (Insight) | - | ஒரு சூழ்நிலையை பார்க்கும் சக்தி அல்லது உணர்வு |
| திட நிலை (Concreting ) | - | ஒரு உண்மையான நிகழ்வு அல்லது நிகழ்வுகளை வகுப்பது. |
| பண்பு (Attributes) | - | குணம், பண்பு அல்லது ஒருவருடைய குணநலன்களை குறிப்பிடுதல். |
| விடுபடுதல் (Bunking) | - | விரைவாக வெளியேறுதல் அல்லது வகுப்பிலிருந்து தப்பித்தல். |
| பழக்க நிலை (Habit formation) | - | புதிய நடத்தை தானாகவே மாறும் செயல். |



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 310 1/5/2020 10:47:31 AM

## மதிப்பீடு

### I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. வழிநடத்துதல் என்ற வார்த்தையின் பொருள்
   அ) பேசுவது ஆ)வழிகாட்டுவது
   இ) கவனிப்பது ஈ)கேட்பது

2. வழிநடத்துதல் என்பது இளைஞர்களுக்கு உதவும் செயல்முறைக்கு
   அ) அவர்களின் கல்வியை நிறைவு செய்ய கற்றுக்கொடுக்கிறது.
   ஆ) மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள
   இ) தன்னுடன், மற்றவர்களுடன், சூழ்நிலைகளை அனுசரித்து கொள்ள
   ஈ) சூழ்நிலையிலிருந்து வெளியேறுதல்

3. வழிகாட்டுதலின் முக்கிய நோக்கம்
   அ) சமமான வளர்ச்சிக்கு உதவுகிறது
   ஆ) மற்றவருடன் பேசுவதற்கும்
   இ) நண்பர்களுடன் தொடர்பு கொள்வதற்கு உதவுகிறது.
   ஈ) குழுவிலிருந்து பிரித்தல்

4. பின்வருவனவற்றில் எது வழிகாட்டுதலின் முக்கிய நோக்கம்.
   அ) உறவுமுறையை வளர்ப்பது
   ஆ) தொடர்புகளை அதிகப்படுத்துவது
   இ) பொறுமையை வளர்த்து கொள்வது
   ஈ) கோபத்தை வளர்த்து கொள்ளுதல்

5. தானிகா, 22 வயது பெண் அவளுடைய பொறியாளர் படிப்பை முடித்துள்ளாள். அவளுக்கு 3 பெரிய நிறுவனங்களிலிருந்து சம மதிப்புடைய நல்ல வேலை கிடைத்துள்ளது. எந்த வகைலான வழிகாட்டுதலை அவள் நாடுவாள்.
   அ)தனிப்பட்ட
   ஆ)தொழில் தொடர்பான
   இ)கல்வி சம்பந்தமான
   ஈ)மேற்கண்ட எதுவுமில்லை

6. மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் நடத்தை பிரச்சினைகளுக்கு உதவி செய்வது மட்டுமல்லாமல் வேலை மற்றும் தொழில் முறை பற்றிய ஆலோசனை கூறுவது எந்த வகையான ஆலோசனை நோக்கத்தின் கீழ் வரும்?
   அ) தடுப்புமுறை ஆலோசனை வழங்குவது
   ஆ) மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவது
   இ) மதம் சம்பந்தமான ஆலோசனை வழங்குவது
   ஈ) மரபியல் ஆலோசனை

7. எந்த வகையான ஆலோசனை ஈமெயில், உண்மை, நேர அரட்டை, மற்றும் காணொலி மாநாடு வழியாக வழங்கப்படுகிறது.
   அ) மரபனு ஆலோசனை
   ஆ) மாணவர் / கல்வியாண்டு ஆலோசனை
   இ) நேரலை ஆலோசனை
   ஈ) ஆலோசனையை தடுத்தல்

8. தொலைக்காட்சி பார்ப்பது, கணிணி விளையாட்டு மற்றும் ஆரோக்கியமற்ற தோழமை வகையான பிரச்சனைகளுக்கு எந்த வகையான ஆலோசனை தேவைப்படுகிறது.
   அ) ஞாபகசக்தி மற்றும் உற்று நோக்குதல்.
   ஆ) பள்ளி/கல்லூரியில் அனுசரித்து செல்வது
   இ) சூதாட்டம் சம்பந்தமான
   ஈ) மேற்கண்ட அனைத்தும்

67FZY5

### II பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி

1. வழிநடத்துதல் – வரையறு.
2. ஏதேனும் 3 வழிநடத்துதலின் நோக்கங்களை எழுதுக.
3. ஏதேனும் வழிநடத்துதலின் 3 குறிக்கோள்களை எழுதுக.
4. வழிகாட்டுதலில் அறிவுரை வழங்குபவரின் ஏதேனும் 3 பண்புகளை எழுதுக.
5. ஆலோசனை வழங்குதல் – வரையறு.

6. ஆலோசனை வழங்குபவரின் 3 பண்புகளை பட்டியலிடுக.

### III சுருக்கமான விடையளி

1. இரண்டு வகையான வழிகாட்டுதலின் வகைகளை விளக்குக.
2. பள்ளிகளில் வழிகாட்டுதல் சேவையின் நோக்கங்களை விவரிக்கவும்.
3. வழிகாட்டுதலின் செயல்களை பட்டியலிடுக.
4. ஆலோசனை வழங்குதலின் தேவையை விளக்குக.
5. ஆலோசனை வழங்குதலின் படிகளை விளக்குக.

### IV விரிவான விடையளி

1. வழிகாட்டுதலின் கொள்கைகள் கலந்தாய்வு செய்க.
2. வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கும் உள்ள வேறுபாடுகள்
3. ஆலோசனை வழங்குதலின் முக்கிய குறிக்கோள்களை விவரிக்கவும்.
4. ஆலோசனை வழங்குதலின் கொள்கைகளை பட்டியலிடுக.
5. பல்வேறு விதமான ஆலோசனை வழங்குதலை கலந்தாய்வு செய்க.
6. ஏதேனும் 5 பிரச்சனைகளை தீர்க்க, ஆலோசனை வழங்குதலின் சேவையை கலந்தாய்வு செய்க.

## மேற்கோள் நூல்கள்


1. Siddiqui, M. H. (2013) Guidance and counselling. New Delhi: APH Publishing Corporation.
2. Sharma, S. K., & Sharma, R., (2012) Communication and educational technology in nursing. New Delhi: Elsevier Health Sciences.
3. Gordon, V. N., Habley, W. R. & Grites, T. J. (Eds) (2008) Academic Advising: A comprehensive hand book: (2nd edition). Jossey-Bass.


## இணைய இணைப்பு


- American Counselling Association. (2016). Consensus definition of counselling. Retrieved from http://www.counselling.org/knowledge-cemtre/20-20-a-vision-for-the-future-of-counselling/consensus-definiton-of-counselling.
- British Association for Counselling and Psychotherapy. (2013). Definition of counselling and psychotherapy. Retrieved from www.bacp.co.uk.
- The Free Dictionary. (2016b) Crisis. Retrieved from www.thefreedictionary.com/crises.
- www.unesdoc.unesco.org/images/0012/001257/125740e.pdf.

## ஆய்வுக் கட்டுரை

**ஆய்வுக் கட்டுரை: 1**

1. Mrs. கமலா, 25 வயது பெண்மணி. இவர் கருவுற்று 22 வாரங்களில் ஹீமோகலோபின் 7.2 கி மற்றும் பசியின்மை காரணமாக ம ரு த் து வ ம னை யி ல் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் தினமும் மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட இரும்புச்சத்து மாத்திரைகளை எடுக்கிறார்.

   (அ) ஒரு செவிலியராக இவருக்கு எப்படி சுகாதார கல்வி அளிப்பாய்?

   (ஆ) மார்கெட்டில் கிடைக்கும் உணவு வகைகளில் இரும்புச்சத்து உள்ள உணவுகளை கொண்டு தொடர்பு அட்டை (Flash cards) தயாரிக்கவும்.

**ஆய்வுக் கட்டுரை: 2**

1. Mrs. உஷா, 23 வயது, இவருக்கு சுக பிரசவத்தில் 2.7 கிலோவில் முதல் பெண் குழந்தை பிறந்த்து. இவர் பிரசவத்திற்கு பின் கவனிக்கும் அறையில் இருக்கிறார்.

   (அ) ஒரு செவிலியராக நீ, அவருக்கு பிரசவத்திற்கு பின் என்னென்ன கண்கானித்தல் செய்வாய்?

**ஆய்வுக் கட்டுரை: 3**

1. ஒரு தாய் முதல் குழந்தை பெற்றுள்ளார் மற்றும்இன்றுஅவர்மருத்துவமனையிலிருந்து வெளியேற்றம்கிறார் (Discharged).

   (அ) அவருக்கு குடும்ப கட்டுப்பாடு பற்றி என்ன அறிவுரைகள் கூறுவாய்?

   (ஆ) என்னென்ன வெளியேற்ற அறிவுறுத்தல்களை அளிப்பாய்?

**ஆய்வுக் கட்டுரை: 4**

1. Mrs. சீதா, 48 வயது பெண்மணி ஆன்ஜைணா பெக்டோரிஸ் (Angina pectoris) –ஸால் ம ரு த் து வ ம னை யி ல் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரின் நிலை பொதுவாக குணமடைந்து வந்தார். அவர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு செல்லும் போது மைட்ரோகிலைசரின் மாத்திரைகள் (Mitoglycerine) எடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளார். மற்றும் செவிலியர் வெளியேற்ற அறிவுரை அளிக்க வேண்டும்.

   (அ) கரு செவிலியர் சுகாதார கல்வியளிக்கும் போது பொதுவான பரிந்துரைகளாக என்ன கூறுவாய்?

   (ஆ) என்ன அறிவுறுத்தல்கள் Mrs. சீதாவை வழக்கமாக செயல்பட தூண்டும்?

**ஆய்வுக் கட்டுரை: 5**

1. Mrs.லீ மற்றும் அவரின் 8 மாத குழந்தை லாவண்யா இவருக்கு தொடர்ச்சியான வயிற்றுப் போக்கு ஏற்படுவதால் குழந்தை நல மருத்துவரை சந்திக்கின்றனர். அக்குழந்தைக்கு பாட்டில் உணவூட்டம் மட்டுமே.

   (அ) வயிற்றுப்போக்கிற்கான காரணங்கள் யாவை?

   (ஆ) என்ன உணவுகளை அவருக்கு கொடுக்கலாம்?

   (இ) பாட்டில் உணவூட்டத்திற்கு நீ என்ன அறிவுரைகள் கூறுவாய்?

**ஆய்வுக் கட்டுரை: 6**

1. Mrs. வசந்தா மற்றும் அவரின் 12 மாத குழந்தை தினேஷ் முதல் முறையாக தடுப்பூசி போட மருத்தவமனைக்கு வருகின்றனர். அக்குழந்தை மிகவும் மெலிந்து இருக்கிறது. பரிசோதனையின் போது அவரின் எடை 6.2 கிலோகிராம். பிறப்பின் போது 2.9 கிலோகிராம் மற்றும் பிறந்த்திலிருந்து ஒரு தடுப்பூசி கூட போட்டதில்லை.

   (அ) அந்த குழந்தையின் எடை எதிர்பார்ர்க்கும் வித்த்தில் இருக்கிறதா?

   (ஆ) 12 மாத்த்தில் என்னென்ன milestones எதிர்பார்க்கப்படுகின்றன?

   (இ) இக்குழந்தைக்கு தடுப்பூசி அட்டவனையை பட்டியலிடுக.

**ஆய்வுக் கட்டுரை: 7**

1. Mrs. மீனா, 29 வயது பெண்மணி அவசர பிரிவை முச்சுத்திணறல், தசைப்பிடிப்பு நோய் மற்றும் ரினோரியாவால் அனுகினார். அதன் அறிகுறிகள் 1 நாளைக்கு முன்புதான் தொடங்கியது மற்றும் மூக்கில் ஒழுக்கும் குறைவான இருமலும் இருக்கிறது. அவருடைய 4 வயது மகன் ரினோரியாவால் கடந்த மூன்று நாட்களாக பாதிக்கப்பட்டிருந்தார், அப்பொழுது அவர் பாதிக்கப்படவில்லை. அவருக்கு முன் மருத்துவ வரலாறு (History) மற்றும் எந்த மருந்தும் எடுக்கவில்லை. மூன்று நாட்களுக்கு முன்பு அவரின் குழந்தைக்கு ஃபுளு தடுப்பூசி கூறியிருந்தார். மீனாவிற்கு பரிசோதனையின் போது இன்புளுயன்சா இருப்பதை கண்டறியப்பட்டார். அவர் சுவாச கோளாறு மற்றும் ஆன்டி வைரஸ் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 5 நாட்களுக்குப் பிறகு மருத்துவமனையிலிருந்து ஆக்சிஜன் மூலம் நல்ல முன்னேற்றத்துடன் வெளியேறினார்.

   (அ) உன் குடும்பத்தில் உள்ள மற்ற நபர்களுக்கு ஃபுளுவை பற்றி நீ எப்படி சுகாதார கல்வி அளிப்பாய்?\



XII_Nursing_Vocational_TM_Unit 11.indd 313 1/5/2020 10:47:31 AM